தினமணி

**50% மானியத்தில் காய்கறி விதைகள்!**

First Published : 26 Aug 2010 10:25:53 AM IST

வேலூர், ஆக. 25: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் காய்கறி மற்றும் கீரை விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

இத் திட்டத்தின் கீழ் கத்தரி, தக்காளி மற்றும் வெண்டை ஆகியவற்றின் வீரிய ஒட்டு ரக விதைகள், கீரை மற்றும் தர்பூசணி விதைகள் 50 சதவீதம் மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக வேலூர் மாவட்டத்துக்குரூ.6.85 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியின விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், பழ மரக்கன்றுகள் மற்றும் தெளிப்பான் உள்ளிட்ட பயிர் பாதுகாப்புக் கருவிகள், ஆயில் என்ஜின் மோட்டார்கள் 90 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன. இதற்காகரூ.4.40 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விரு திட்டங்களிலும் பயன்பெற விரும்புவோர் அந்தந்த வட்டாரங்களில் உள்ள தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அணைக்கட்டு தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

**குண்டுமல்லியில் பூச்சித் தாக்குதலா? கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 26 Aug 2010 10:27:42 AM IST

அரக்கோணம், ஆக. 25:குண்டுமல்லியில் தற்போது பூச்சித் தாக்குதல் அதிகம் உள்ளதால் அதைக் கட்டுப் படுத்தும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலைத்துறையின் அரக்கோணம் உதவி இயக்குநர் ஐ.ஜெபக்குமாரிஆனி யோசனை கூறியுள்ளார்.

தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்பட்டு வந்த குண்டுமல்லி தற்போது வடக்கு மாவட்டங்களிலும் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. குறிப்பாக சென்னையை ஒட்டியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மாவட்டப் பகுதிகளில் அதிக அளவு பயிரிடப்படுகிறது.

இந்நிலையில் தற்போது குண்டுமல்லி செடிகளில் பூச்சித் தாக்குதல் அதிகம் உள்ளது. குறிப்பாக மொட்டுப் புழு, மலர் ஈ, இலைப்பிணைக்கும் புழு, சிலந்திப்பேன், இருபுள்ளி சிலந்திப்பூச்சி ஆகியவற்றின் தாக்குதல் உள்ளது.

மொட்டுப் புழு: இது மொட்டைத் தாக்கக்கூடியது. இவை அல்லி இதழ்களைத் தாக்கி சேதம் விளைவிக்கும். தாக்கப்பட்ட மொட்டின் மேல் புழுவின் கழிவுகள் காணப்படும். மேலும் பூவின் நிறம் கத்தரிப்பூ போன்ற ஊதா நிறமாக மாறி நிறமிழந்து காணப்படும்.

இதைக் கட்டுப்படுத்த பூக்காத பருவத்தில் செடி வளையத்தைச் சுற்றி இருக்கும் மண்ணை கிளறிவிட்டு கார்பரில் 10 சதவீத மருந்தை மண்ணில் தூவ வேண்டும். இதனால் மண்ணில் இருக்கும் கூட்டுப்புழுவை கட்டுபடுத்தலாம்.

இரவில் வரும் தாய் அந்துப்பூச்சியை கவர்வதற்காக ஒரு ஹெக்டேருக்கு 15 விளக்குப்பொறி வைக்க வேண்டும். ஆரம்ப நிலையில் 5 சதவீத வேப்பங்கொட்டை கரைசலைத் தெளித்தும் கட்டுப்படுத்தலாம். புரோபிளோபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். அல்லது ஸ்பைனோசட் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.35 மி.லி. கலந்து தெளிக்க வேண்டும்.

மலர் ஈ: மலர் ஈ மொட்டுகளின் காம்புப் பகுதியில் முட்டைகளை இடும். புழுவானது காம்புப் பகுதியின் உள்ளே நுழைந்து வீக்கத்தை ஏற்படுத்தும். இதனால் மலரின் வளர்ச்சி குன்றி காய்ந்து இளம் மொட்டுகளிலேயே உதிர்ந்து விடும்.

இதைக் கட்டுப்படுத்த நொவலூரான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மி.லி. என்ற அளவில் கலந்து மாலையில் தெளிக்க வேண்டும். ஆசிட்டாமிபீரிட் அல்லது இண்டக்சாகாளாப் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 1.5 மி.லி. வீதம் கலந்து மாலையில் தெளிக்க வேண்டும்.

இலைபிணைக்கும் புழு: இலைபிணைக்கும் புழுவின் தாய் அந்துப்பூச்சிகள் இளம் தளிர்களில் முட்டையிடும். வெளிவரும் இளம்புழுக்கள் இலையின் பச்சையத்தை சுரண்டி உண்ணும். இவை மழைக்காலத்தில் இலையின் அடிப் பாகத்தையும், வெயில் காலத்தில் குருத்துப் பகுதியையும் சேதப்படுத்தும்.

இதைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டம்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது ஹோஸ்டேர்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. என்ற அளவில் கலந்து மாலையில் தெளிக்க வேண்டும்.

சிலந்திப்பேன்: தாய் சிலந்திப்பேன் தாக்குதலால் இலை, குருத்து, பூமொட்டு போன்ற பாகங்களில் மெல்லிய கம்பளம் போன்ற வெண்ணிற (திட்டுக்கள்) ரோம வளர்ச்சித் தோன்றும். இதனால் ஒளிச்சேர்க்கை தடைபட்டு செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, பூக்களின் எண்ணிக்கை குறையும்.

இதைக் கட்டுப்படுத்த வெர்டிமெக் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். புரப்பார்ஹைட் அல்லது பெனாசாஃகுயின் மருந்தை 2 மி.லி. வீதம்

மாலையில் தெளிக்க வேண்டும்.

இருபுள்ளி சிலந்திப் பூச்சி: தாய் சிலந்திப்பூச்சிகள் வெண்மை மற்றும் மஞ்சள் நிறத்திட்டுக்களாக இலைப் பகுதிகளில் காணப்படும். தாக்கப்பட்ட இலைகள் மற்றும் பூ மொட்டுகள் நிறமிழந்து காணப்படும்.

இதைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும். செடிகளுக்கு இடையே நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும். அதிகம் பாதிக்கப்பட்ட இலைப் பகுதிகளை கவாத்து செய்து அப்புறப்படுத்த வேண்டும்.

அபாமெக்டின் அல்லது எஜ்ப்ஸô0டஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மி.லி. என்ற அளவில் மாலையில் தெளிக்க வேண்டும். ஆஸô0ராக்டின் 50,000 பிபிஎம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மி.லி. வீதம் கலந்து தெளிக்கலாம்.

பெனாசாக்குபின் அல்லது ஹோஸ்டாதியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. வீதம் கலந்து தெளிக்கலாம்.

**கத்தரியில் தண்டுப்புழுவா?**

First Published : 26 Aug 2010 10:26:54 AM IST

தருமபுரி, ஆக. 25:கத்தரியில் தண்டுப் புழுவின் தாக்குதல் இருந்தால், அதை கட்டுப்படுத்துவது குறித்து பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ப. ஸ்ரீதர் யோசனை தெரிவித்துள்ளார்.

கத்தரியில் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப தண்டுப் புழுவின் தாக்குதல் இருக்கும். குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் இதன் தாக்குதல் அதிகமாக உள்ளது.

கத்தரி செடியில் காய், தண்டுப் பகுதியில் புழுத் தாக்குதல் அதிகம் ஏற்படும். பொதுவாக கத்தரி செடியில் முசினோடஸ்அரிபோனாலிஸ் என்ற புழுத் தாக்குதல் பரவலாக காணப்படும். இதனால்,செடிகள் காய்ந்துவிடும் நிலைக்கு தள்ளப்படும்.

இவை தண்டின் அடியிலும், தண்டிலிருந்து கிளை பிரியும் இடத்திலும் சிறு துளையிட்டு இனப்பெருக்கத்தை தொடங்கும். இப்புழுக்களின் தலை சிவப்பு நிறத்திலும், உடல் வெள்ளை நிறத்திலும் காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

விளக்குப் பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். பைரித்திராயட் மருந்து தெளிப்பதை விவசாயிகள் நிறுத்தி வைக்க வேண்டும். இம்மருந்துகள் புழுக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திவிடும்.

ஏக்கருக்கு 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்க வேண்டும்.

கார்பரில் 2 கிராம் அல்லது புரோபனோபாஸ் 1.5 மில்லிகிராம் ஆகியவற்றை செடிகள் மீது தெளிக்க வேண்டும்.

இம்மருந்து தெளித்தும், தண்டுப் புழுக்களின் தாக்குதல் குறையவில்லையென்றால், ஒரு லிட்டர் தண்ணீரில் கார்பரில் 2 மில்லிகிராம் கலந்து மாலை நேரங்களில் கத்தரி செடியின் வேர்களில் ஊற்றலாம்.

**கம்பம் பகுதியில் நிலக்கடலையை நவீன முறையில் அளக்க விவசாயிகள் கோரிக்கை**

நமது நிருபர்

First Published : 26 Aug 2010 11:44:09 AM IST

கம்பம், ஆக. 25: தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் நிலக்கடலை விளைச்சல் அதிகரித்த நிலையில், வியாபாரிகள் மரக்காலால் அளப்பதை மாற்றி எடைக் கற்களால் அளக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி மேற்குத் தொடர்ச்சி மலை ஏகலூத்து, கல்லூடைச்சான் பாறை, கழுதை மேடு, புதுரோடு, பெருமாள்கோவில் மலை, கோம்பை ரோடு உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மானாவாரி நிலங்களில் நிலக்கடலை பயிரிடப்பட்டிருந்தது.

கடந்த சில நாள்களாக நிலக்கடலை அறுவடைப் பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நிலக்கடலையை மதுரை, விருதுநகர், சென்னை, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

கம்பம் பகுதியில் 12 மரக்கால் கொண்ட ஒரு மூட்டை கடலை | 1000 முதல் 1,250 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில், கடலையை மரக்காலால் அளக்கும் அளவையாளர்கள் ஒரு மூட்டைக்கு சுமார் 2 முதல் 3 மரக்கால் அதிகமாக அளந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

விவசாயிகளிடமிருந்து நெல், எள், கம்பு, சோளம், வரகு போன்ற தானியங்களை பெறும் வியாபாரிகள், பல ஆண்டுகளுக்கு முன்பே மரக்காலில் அளக்கும் முறையை கைவிட்டு, தற்போது நவீன எடை தராசுகள் மூலம் அளந்து பெற்றுச் செல்கின்றனர்.

ஆனால், இந்த நவீன காலத்திலும் நிலக்கடலையை மட்டும் ஏனோதானேவென்று மரக்காலில் அளப்பதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம், நிலக்கடலையை நவீன தராசுகளில் அளக்க வேண்டுமென்று தொடர்ந்து விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது குறித்து, கடலை விவசாயி பொம்மு கவுடர் கூறியதாவது:

நிலக்கடலை மானாவாரியாக எங்கள் பகுதியில் ரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் விளைவிக்கப்படுகிறது. இதற்காக, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் கடலை வாங்க இங்கு குவிகின்றனர்.

ஆனால், வியாபாரிகளால் அழைத்து வரப்படும் அளவையாளர்கள் கண்மூடித் திறக்கு முன் மரக்காலில் கடலையை அளந்து கொட்டி விடுவதால், அளவு தெரியாமல் போகிறது.
எனவே, கஷ்டப்படும் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும் வகையில் எடைக் கற்களை அல்லது நவீன தராசுகளை பயன்படுத்தி அளக்கும் முறையை கொண்டுவரவேண்டும் என்றார்.

வியாபாரிகள் கூறும்போது: பாரம்பரியமாக இப்பகுதியில் நிலக்கடலையை நாங்கள் மரக்காலில்தான் அளந்து வருகிறோம். மேலும், மற்ற பகுதிகளை விட கூடுதல் விலைக்கு கடலையை வாங்கி வருகிறோம்.
இந்த கடலைகள் அதிகளவில் மிட்டாய் தயாரிப்பதற்கு ஏற்றதாக உள்ளதாகத் தெரிவித்தனர்.

## 50 சத மானியத்தில் பயறு வகை விதைகள்

First Published : 26 Aug 2010 11:50:58 AM IST

திண்டுக்கல், ஆக. 25: கூடுதல் பரப்பளவில் பயறு வகை சாகுபடியை மேற்கொள்ள, அரசு பயறு வகை விதைகளுக்கு 50 சதவீத மானியம் வழங்குகிறது.

இந்தாண்டு கூடுதல் பரப்பளவில் பயறு வகை சாகுபடி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அதனடிப்படையில், நேசனல் புட் செக்யூரிட்டி மிஷன் திட்டம் மூலம் பயறு வகை விதைகள், உயிர் உரங்கள், நுண்ணுரங்கள், மருந்துகள், கைத் தெளிப்பான்கள், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், பம்பு செட்டுகள் ஆகிய இனங்களில் மானியம் வழங்கப்பட உள்ளன.

தேவைப்படும் விவசாயிகள், சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் வேளாண் விரிவாக்க மைய அலுவலர்களை அணுகி பயன்பெறலாம் என, வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ. பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கோபி வட்டாரத்தில் காய்கறி பயிர்கள் சாகுபடி அதிகரிப்பு

First Published : 26 Aug 2010 11:12:16 AM IST

கோபி, ஆக.25: கோபி வட்டாரத்தில் இந்த ஆண்டு பெய்துள்ள கூடுதல் மழையால் காய்கறி பயிர்கள் சாகுபடி அதிகரித்துள்ளது.
÷கோபி வட்டாரத்தில் சுமார் 30 ஆயிரம் ஹெக்டேரில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, ராகி, துவரை, பாசிப்பயிறு, உளுந்து, நிலக்கடலை, எள், கரும்பு, மஞ்சள், தக்காளி, வெங்காயம், கத்தரி, சேனை, வெண்டை மற்றும் தட்டை உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

÷நடப்பாண்டு ஜூன் மாதம் 45 மி.மீ, ஜூலை மாதம் 53 மி.மீ, ஆகஸ்ட் மாதத்தில் 23ம் தேதி வரை 72 மி.மீ மழை பெய்துள்ளது. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பகுதிகளில் முதல்போகத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ளது.
÷நடப்பாண்டு கூடுதல் மழை பெய்துள்ளதால் குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை கோபி விவசாயிகள் சாகுபடி செய்தனர். பொதுவாக மலைப் பகுதியில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்ட காலி பிளவர் தற்போது கோபி, சிறுவலூர், வேட்டைக்காரன் கோவில், தாசம்புதூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
÷மஞ்சளுக்கு ஊடுபயிராக செங்கீரை, சிறிய வெங்காயம், சேனை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கத்தரி, தக்காளி, சின்ன வெங்காயம், பாகற்காய், புடலை, பீர்க்கங்காய், தட்டை, வெண்டை உள்ளிட்ட தோட்டக்கலை காய்களும் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த நாட்களில் அதிக மகசூல் தரும் பல்வேறு கீரை வகைகள் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படுவதால் கோபியில் குறைந்த விலைக்கு கீரை வகைகள் கிடைக்கின்றன.
÷உற்பத்தி அதிகரிப்பால் கோபி உழவர் சந்தைக்கு கடந்த 2 வாரங்களாக காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது, விலையும் சற்று குறைந்துள்ளது. வெண்டைக்காய் | 16ல் இருந்து | 12க்கும், காலி பிளவர் | 24ல் இருந்து | 16க்கும், முட்டைகோஸ் | 20ல் இருந்து | 16க்கும், பீன்ஸ் | 35ல் இருந்து | 24க்கும், தக்காளி | 10ல் இருந்து | 8க்கும், கத்தரிக்காய் | 14ல் இருந்து | 12க்கும், சின்ன வெங்காயம் | 16ல் இருந்து | 10க்கும், உருளைக்கிழங்கு | 18ல் இருந்து | 16க்கும், புடலை | 14ல் இருந்து | 12க்கும் விலை குறைந்துள்ளது. கடந்த மாதம் | 5க்கு விற்ற முருங்கை தற்போது | 2க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகைப் பயிர்களுக்கு மானியம்**
First Published : 26 Aug 2010 11:15:12 AM IST

சங்ககிரி, ஆக. 25: சாகுபடி பரப்பையும், உற்பத்தி திறனையும், உற்பத்தியையும் உயர்த்தி, வேலைவாய்ப்பினை உருவாக்கி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் முக்கிய நோக்கங்களை கருத்தில்கொண்டு தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
÷ சேலம் மாவட்டத்தில் 2010-2011ம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் வழங்கப்படும் மானிய உதவிகள் குறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் கூறியுள்ளதாவது:
÷பயறுவகை விதைப்பண்ணைகள் அமைத்து ஆதார விதைகள் மற்றும் சான்று விதைகள் வழங்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் மானியமாக ஒரு கிலோவிற்கு |25 மானியமாக வழங்கப்படுகிறது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகிக்கப்படும் சான்று பெற்ற

பயறுவகை விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு |20 மானியமும், பயறு வகை தொழில்நுட்ப செயல்விளக்கத்திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு | 2 ஆயிரமும், பயறுவகைப் பயிர்களுக்கு ஜிப்சம், நுண்ணூட்டம், உயிர் உரங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவைகளுக்கு 50 சதவீத மானியமும், ரோடவேட்டர் உழவு கருவி 50 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக ஒரு கருவிக்கு | 30 ஆயிரம் வீதமும், கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பானுக்கு 50 சதவீத மானியமும், பம்பு செட்டுகள் 50 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக ஒரு பம்பு செட்டுக்கு | 10 ஆயிரமும், தெளிப்பு நீர்ப்பாசனக்கருவிகள் அதிகபட்சமாக 50 சதவீத மானிய விலையில் ஒரு யூனிட்டுக்கு | 7 ஆயிரத்து 500ம், தண்ணீர் கொண்டு செல்லும் பைப் லைன்கள் 50 சதவீத மானிய விலையில் அதிகபட்சமாக ஒரு யூனிட்டுக்கு |15 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**கலைக்கப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் தொடங்கப்படுமா?**

கே. கான்முகமது

First Published : 27 Aug 2010 02:18:44 AM IST

பேராவூரணி : தமிழகத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட 200-க்கும் மேல்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் தொடங்க வேண்டும் என விவசாயிகளும், பொதுமக்களும் எதிர்பார்க்கின்றனர்.

கிராமப் பகுதிகளில் விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த வட்டியில் நகைக் கடன் வழங்குவது, மானிய விலையில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட விவசாயித்திற்குத் தேவையான அடிப்படை உதவிகளைச் செய்வது ஆகிய நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2003 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள 200-க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகக் காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டு, அருகிலுள்ள வேறு சங்கங்களுடன் இணைக்கப்பட்டன.

முக்கியமாக, கடன் வசூலாகவில்லை என்ற காரணத்தினால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டன. திமுக ஆட்சி பொறுப்பேற்றவுடன் 7 ஆயிரம் கோடி கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததால், திரும்பவும் இந்த வங்கிகள் தொடங்கப்படும் என விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்தனர்.

ஒரு சில மாவட்டங்களில் அரசியல் செல்வாக்கு காரணமாக கலைக்கப்பட்ட சில சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தஞ்சா மாவட்டத்தில் கலைக்கப்பட்ட 26 சங்கங்களில் ஒன்றுகூட

புதுப்பிக்கப்படவில்லை. மேலும், இந்தச் சங்கங்களில் பணிபுரிந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மாற்றுப் பணி வழங்கப்படாமல் மிகுந்த சிரமத்தில் உள்ளனர். இவர்கள் பணிபுரிந்த போது இவர்களிடம் இருந்து பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை, தொடர் வைப்புத் தொகை, வருங்கால வைப்பு நிதி, ஊதியப் பாக்கி எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.
கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்ட பிறகு, பலர் பணி ஓய்வு பெறும் வயதை அடைந்து, எந்த உதவியும் இல்லாமல் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களை சிறப்பு தணிக்கை செய்து நிதி வழங்குவதற்காக மத்திய அரசால் 2008 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பேராசிரியர் வைத்தியநாதன் கமிட்டி, கலைக்கப்பட்ட சங்கங்கள் பற்றிய எந்தவித சிறப்புத் தணிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.
இதுகுறித்து சமூக ஆர்வலரும், வழக்கறிஞருமான ப. பாலசுப்பிரமணியன் கூறியது:
கிராமப்புற விவசாயிகள் பயன்பெறவும், விவசாய பணிகளை குறிப்பிட்ட காலத்தில் தொடங்கவும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு வகையில் உதவி செய்து வந்தன.
எங்களது பகுதியான செருவாவிடுதியில் 1500-க்கும் மேல்பட்ட உறுப்பினர்களுடன் இயங்கி வந்த வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அருகிலுள்ள ஊராட்சியான திருச்சிற்றம்பலத்துடன் இணைக்கப்பட்டது. இதனால், எங்கள் பகுதி விவசாயிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்.
சமீபத்தில் திருச்சிற்றம்பலம் கிளையின் மூலம் மாடு வளர்ப்பதற்கான கடன் வழங்கப்பட்டதில் ஒருவர்கூட செருவாவிடுதியைச் சேர்ந்தவர்கள் இல்லை. இதே நிலைதான் கலைக்கப்பட்ட சங்கங்கள் உள்ள பகுதி மக்களின் நிலை.

எனவே, கிராமப்புற விவசாயிகள் மேன்மையடைய, கலைக்கப்பட்ட அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களையும் புதுப்பிக்க வேண்டும் என்றார் அவர்.
கலைக்கப்பட்ட ஒரு சங்கத்தில் பணிபுரிந்து வேலைவாய்ப்பை இழந்த செயலர் ஒருவர் கூறியது:
எந்தவித அறிவிப்புமின்றி திடீரென 200-க்கும் மேல்பட்ட சங்கங்களைக் கலைத்ததோடு, எங்களுக்கு மாற்றுப் பணி வழங்காததால் என்னைப் போன்ற ஆயிரத்திற்கும் மேல்பட்டோரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கியதைப் போல, எங்களுக்கும் வேலை வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
எங்களோடு பணிபுரிந்த பல பட்டதாரிகள் மாற்றுப் பணி இல்லாததால், கூலி வேலை செய்து வருகின்றனர். எனவே, கலைக்கப்பட்ட அனைத்து சங்கங்களையும் மீண்டும் தொடங்கி, எங்களுக்குப் பணி வழங்க வேண்டும் என்றார் அவர்.
கிராமப்புற விவசாயிகளை வட்டிக்கு பணம் கொடுப்போரிடமிருந்து காப்பாற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

**உணவுப் பணவீக்கம் 10.5%**

First Published : 27 Aug 2010 12:00:00 AM IST



புது தில்லி, ஆக.26: நாட்டின் உணவுப் பணவீக்கம் ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் 10.05 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொடர்ந்து இரண்டு வாரங்களாக உணவுப் பணவீக்கம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. முந்தைய வாரத்தில் உணவுப் பணவீக்கம் 10.35 சதவீதமாக இருந்தது. காய்கறிகளின் விலை கணிசமாகக் குறைந்ததே இதற்கு முக்கியக் காரணம் என்று தெரிகிறது. இருப்பினும் உணவுப் பணவீக்கத்தில் ஏற்ற, இறக்க நிலை தொடரும்.

அக்டோபர் மாதத்திற்குப் பிறகு இது குறையத் தொடங்கும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு இதே காலத்தில் உணவுப் பணவீக்கம் 13.45 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒட்டுமொத்த பணவீக்கம் 20 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உருளைக் கிழங்கு விலை 50 சதவீதமும், காய்கறிகளின்விலை 14.23 சதவீதமும் குறைந்துள்ளது. வெங்காயத்தின் விலை 7.29 சதவீதம் குறைந்துள்ளது. குறுவை சாகுபடி பயிர்கள் சந்தைக்கு வரத் தொடங்கியவுடன் விலை மேலும் குறையும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் உணவுப் பொருள் விலையில் ஏற்ற, இறக்க நிலை காணப்படுவதாகவும், இதே நிலை அக்டோபர் மாதம் வரை நீடிக்கும் என்றும் ஆக்ஸிஸ் வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணர் செப்கதா பட்டாச்சார்ய தெரிவித்தார். குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவுக்கு இருப்பின், அக்டோபர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் அதிக அளவில் குறைய வாய்ப்புள்ளது என்று கிரிசில் தரச்சான்று நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் டி.கே. ஜோஷி கூறினார். வேளாண் உற்பத்தி அதிகரிக்கும்போது, தீவன உற்பத்தியும் உயரும், இதனால் பால் உற்பத்தி பெருகும் என்று அவர் மேலும் கூறினார். முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் பால் விலை 15.24 சதவீதம் அதிகரித்துள்ளது. பருப்பு, அரிசி, கோதுமை ஆகியவற்றின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரிசி விலை 7.72 சதவீதமும், கோதுமை விலை 7.61 சதவீதமும் உயர்ந்துள்ளது. பாசுமதி அல்லாத பிற அரிசி ஏற்றுமதிக்கு அரசு தொடர்ந்து தடை விதித்திருப்பதால் இவற்றின் விலை உயராமல் உள்ளது.

தற்போதைய சூழலில் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை என மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா குறிப்பிட்டுள்ளார். அரிசி ஏற்றுமதிக்கு 2008-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. கோதுமை மீதான தடை 2007-ம் ஆண்டிலிருந்து உள்ளது.

உணவுப் பணவீக்கம் கட்டுக்குள் குறைந்து வந்தபோதிலும் ஒட்டுமொத்த பணவீக்கம் குறையாமல் உள்ளது கவலையளிப்பதாக உள்ளது. வங்கி வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளதால், பணப்புழக்கம் குறைந்து, பணவீக்கம் குறையும் என ரிசர்வ் வங்கி எதிர்பார்க்கிறது. இருப்பினும் ரிசர்வ் வங்கி தனது கட்டுப்பாட்டை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று காஸ்ô நிதி நிறுவன ஆலோசகர் சித்தார்த் சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்தில் ஒட்டுமொத்த பணவீக்கம் இரட்டை இலக்கத்திலிருந்து குறைந்து 9.97 சதவீதமாக உள்ளது.

**தலையங்கம்: பாவம், கறவை மாடுகள்**

First Published : 26 Aug 2010 12:00:00 AM IST

Last Updated : 26 Aug 2010 12:13:13 AM IST

இந்திய உணவுக் கழகக் கிடங்குகளில் வீணாகும் தானியங்களை வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்களுக்கு இலவசமாக அளித்துவிடலாம் என்று நீதிமன்றம் ஆலோசனை வழங்குகிறது. அதற்கு மத்திய அமைச்சர் சரத் பவார் மறுப்புத் தெரிவிக்கிறார். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் யெச்சூரி காரசாரமாகப் பேட்டி கொடுக்கிறார். இதையெல்லாம் பார்க்கும்போது, இதை மனிதர்களுக்குக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, கொஞ்சம் கறவை மாடுகளுக்காவது கொடுத்துவிடுங்களேன் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஏனென்றால், வைக்கோல் போன்ற உலர் தீவனங்களில் 40 விழுக்காடும், புல் போன்ற பசுந்தீவன வகைகளில் 36 விழுக்காடும், பிண்ணாக்கு போன்ற தீவன வகைகளில் 57 சதவீத விழுக்காடும் பற்றாக்குறை நிலவுகிறது என்று கால்நடைத் துறை தரும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பவியல் துறை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டனர். இந்தியாவில் உள்ள கறவை மாடுகளுக்குக் கிடைக்கும் தீவனம் போதுமானதாக இல்லை.

மேலும், இவை தரமானதாகவும் இல்லை. ஆகவே, கறவைமாடுகள் குறைவாகப் பால் தருகின்றன என்பதுதான் அந்தக் கருத்து.

இந்தியாவில் பால் உற்பத்தி தற்போது ஆண்டுக்கு 10 கோடி டன்னாக உள்ளது. இந்த அளவினை 2022-ம் ஆண்டில் 17.2 கோடி டன்னாக உயர்த்த வேண்டும் என்று (அதாவது ஆண்டுதோறும் 4 விழுக்காடு வளர்ச்சி) மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் தீவனம் தொடர்பான எந்தவிதமான அக்கறையும் இல்லாததால், கறவை மாடுகள் பால் குறைவாக கொடுக்கும் நிலைதான் நீடிக்கிறது. பால் விற்பனையில் கிடைக்கும் பணத்தில் 70 சதவீதம் தீவனத்துக்கே சென்றுவிடுகிறது என்றும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால், தீவனத்தின் விலையோ அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அண்மையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஈரோடு பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தி, தீவனத்தின் விலை உயர்ந்துவிட்டதால், போதுமான தீவனம் வழங்குவதுடன் பால் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று போராட்டம் நடத்தினர்.

பால் ஒரு வணிகப் பொருளாக உருமாறும் முன்பு, வயல்களில் அறுவடை செய்தால், அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு என்பதாக இருந்தது. அதாவது தானியம் வீட்டுக்கு வரும். வைக்கோல் மாட்டுக்குப் போய், சாணமாக மீண்டும் உரமாகும். அறுப்புக்குப் பிறகு காட்டிலேயே இருக்கும் அடிப்பகுதி அடுத்த சாகுபடிக்கு மடக்கிப்போட்டு உழப்படும். இதனால் விவசாயிக்கு தீவனம் வாங்க வேண்டிய செலவு இல்லை. சாண உரமும் கிடைத்தது. வீட்டுக்குப் பாலும் கிடைத்தது.

பால் எப்போது வணிகப் பொருளாக மாறியதோ அப்போது செலவுகளும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. பணம் செலவிட்டு தீவனம் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் தீவனம் விலை உயர்ந்துவிட்டதோடு, போதுமான அளவு கிடைப்பதும் இல்லை. இதற்கு அரசின் வர்த்தகக் கொள்கைகளும் காரணம்.

எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கில் 30 விழுக்காடு புரதம் இருக்கிறது. பசுக்களுக்கு இது போதுமானது. ஆனால், மத்திய அரசு எண்ணெய் பிழியப்பட்ட பிண்ணாக்கு ஏற்றுமதிக்கு 7 சதவீதம் ஊக்கத்தொகை கொடுத்து ஊக்குவிக்கிறது. 2009-ம் ஆண்டில் ஏறக்குறைய 5,000 கோடிக்கு பிண்ணாக்கு ஏற்றுமதி நடந்துள்ளது. பிறகு மாடுகளுக்கு பிண்ணாக்கு எப்படி கிடைக்கும்?

மாட்டுக்கு ஏற்ற உணவுதான் தவிடு. ஆனால், தவிட்டு எண்ணெய்க்காக அரிசி ஆலைகளிலிருந்து நேரடியாக எண்ணெய் பிழிவுக் கூடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன தவிடு மூட்டைகள். தவிட்டு எண்ணெய்க்கு மேற்கு வங்கம், சீனா, இந்திய தொழிற்சாலைகளில் வரவேற்பு அதிகம். ஆகவே, தவிடும் கிடைப்பதில்லை.

வைக்கோலை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு ஏற்றிச் செல்வதற்கான கூலியே இதன் விலையை உயர்த்திவிடுகிறது. ஒரு லாரியில் 4 டன்னுக்கு மேலாக ஏற்ற முடிவதில்லை. இதை தொழில்நுட்பத் திறனுடன் செங்கல்போன்ற வில்லைகளாக அழுத்தி ஏற்றினால் 10 டன் வரை லாரியில் ஏற்ற முடியும். ஆனால், இதெல்லாம் கட்டுப்படியாகவில்லை.

ஒவ்வொரு மாநில அரசும் பசுக்களின் தீவனத்துக்கான தனி நிதிஒதுக்கீடு செய்து, இதில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. கறவை மாடுகளுக்குப் போதுமான தீவனம் கிடைக்கிறதா என்பதை அறியவும், அதற்கு எந்தச் சத்து குறைவாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப தீவனத்தைப் பரிந்துரை செய்யவும் பால்வளத் துறையில் ஊட்டச்சத்து அலுவலர்கள் இல்லை.

தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனம், தனது உறுப்பினர்களுக்காக தீவன உற்பத்தியைச் செய்கிறது என்றாலும் அது போதுமானதாக இல்லை. சுமார் 8000-க்கும் மேற்பட்ட கூட்டுறவு பால் சங்கங்கள் இருக்கின்றன. அதன் தேவைக்கும், தீவன உற்பத்திக்கும் பெரும் இடைவெளி தமிழ்நாட்டிலும் இருக்கவே செய்கிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பால் உற்பத்திச் சங்கங்கள் மூலமாக நாளொன்றுக்கு 22.5 லட்சம் லிட்டர் பால் கிடைக்கிறது. இதுவே நல்ல தீவனம் கிடைக்கச் செய்தால், இதே எண்ணிக்கை கறவை மாடுகளிடம் இன்னும் கூடுதலாக பால் கிடைக்கும்.

இந்தியாவில் பால் தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. தீவனப் பற்றாக்குறையைப் போக்கி, குறைந்த விலையில் தீவனம் கிடைக்கச் செய்தால், இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதுடன் அதிகமாகவே பால் உற்பத்தி பெருகிட வழியுண்டு. விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கும். ஆனால், அரசு இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்ய 30 ஆயிரம் டன் பால் பவுடரை சுங்கவரி விலக்கு அளித்து இறக்குமதி செய்கிறது. அதேநேரத்தில், பிண்ணாக்குக்கு ஊக்கத்தொகை அளிப்பதோடு, எருமை மாட்டிறைச்சி ஏற்றுமதிக்கும் 4 விழுக்காடு ஊக்கத்தொகை தருகிறது.

என்னத்த சொல்ல! "மாட்டைக் கடிச்சி மனுஷனையும் கடித்த கதை' என்கிற பழமொழியைக் கொஞ்சம் மாற்றிப் போடத்தான் வேண்டியிருக்கிறது.

தினமலர்

**இயந்திரங்கள் வரத்து, ஆட்கள் பற்றாக்குறை : விடை பெறும் நிலையில் வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:51 IST

மேட்டூர்: மாற்று தொழில் செல்லும் விவசாய கூலியாட்கள், இயந்திரங்கள் வரத்து காரணமாக காலம் காலமாக விவசாயிகள் பயன்படுத்திய வேளாண் கருவிகள் விற்பனை குறைந்து, விரைவில் விடைபெறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
ஆண்டுதோறும் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடியை துவங்குவர். அதற்காக நிலத்தை சீர் செய்ய மம்பட்டி, கலப்பை, கத்தி, அரிவாள் போன்ற வேளாண் கருவிகளை வாங்குவது வழக்கம். சாகுபடி சமயத்தில் வேளாண் கருவிகள் விற்பனை அதிகமாக இருக்கும் என்பதால், வியாபாரிகள் பலர் கிராம சந்தைகளில் வேளாண் கருவிகளை விற்பனை செய்வர். சமீபகாலமாக சந்தைகளில் வேளாண் கருவிகள் விற்பனை வெகுவாக குறைந்து விட்டது வியாபாரிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.
ஜலகண்டபுரத்தில் வேளாண் கருவிகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் கூறியதாவது: முன்பு தென்மேற்கு அல்லது வடகிழக்கு பருவமழை சீஸனில் மம்பட்டி, அரிவாள், களைவெட்டி, ஏர் கலப்பை போன்றவற்றை விவசாயிகள் அதிக அளவில் வாங்கி செல்வர். சமீபகாலமாக ஏர் உழுவதற்கு, களை எடுப்பதற்கு, நாற்று நடுவதற்கு என தனித்தனியாக இயந்திரங்கள் வந்து விட்டன.
தவிர, விவசாய தொழிலாளர்கள் பலர் மாற்று வேலைக்கு சென்று விட்டனர். விவசாய தொழிலாளர்கள் காலம் காலமாக பயன்படுத்திய மம்பட்டி, கலப்பைகளின் உபயோகம் படிப்படியாக குறைந்து வருகிறது. அதற்கேற்ப விற்பனையும் மூன்றில் ஒரு பங்காக குறைந்து விட்டது. நாங்கள் பல தலைமுறையாக வேளாண் கருவிகளை விற்பனை செய்கிறோம். ஆண்டுதோறும் கருவிகள் விற்பனை குறைந்து கொண்டே வருவதால், எங்கள் வாரிசுகள் மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். வரும் காலத்தில் பழமையான வேளாண் கருவிகள் விற்பனை மேலும் குறையும், என்றனர்.

**செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:08 IST

தர்மபுரி: மொரப்பூர் அடுத்த வரப்பம்பட்டி விவசாயி காளியண்ணன். வயலில் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் 2

சதவீத 2 டி.ஏ.பி., உரம் கரைசல் தெளிப்பு குறித்து செயல் விளக்கம் முகாம் நடந்தது. இணை பேராசிரியர் ஸ்ரீதர், சரவணன் ஆகியோர் தொழில் நுட்பம் குறித்து விளக்கினர். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் கோவை வேளாண் கல்லூரி இளநிலை வேளாண் வணிக மேலாண்மை மாணவர்கள் தண்டயுதபாணி, கவுதம், கார்த்திக், மகாலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விதை சான்று திடல்கள்: வேளாண் ஆணையர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:04 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயறு சாகுபடி விதை சான்று திடல்களை வேளாண் ஆணையர் ஆய்வு செய்தார். தர்மபுரி மாவட்டத்தில் பயறு சாகுபடி பரப்பினையும், உற்பத்தியினையும் பெருக்கிட தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (பயறு) தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் விதை கிராம திட்டம் மூலம் பயறு சான்று விதை விநியோகம், தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்திட விவசாயிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்க ஒரு கோடியே 36 லட்சத்து 813 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்ட (பயறு) வேளாண் ஆணையர் கோசலராமன் விதை கிராமத்திட்டம் மற்றும் பயறு உற்பத்தியை பெருக்குவதற்கான தொழில் நுட்பங்கள் அடங்கிய வயலாய்வு பணிகளை ஆய்வு செய்தார். தர்மபுரி அடுத்த நல்லாகவுண்டனஅள்ளி கிராமத்தில் அமைக்கப்பட்ட 69 ஏக்கரில் உளுந்து டி.எம்.வி.ஒன்று சான்று விதைப்பண்ணையை ஆய்வு செய்தார். ஆய்வின் போது, விதைப்பண்ணை அமைத்த விவசாயிகளிடம் பயறு விதைகளுக்கு கொள்முதல் விலையினை நிர்ணயிக்கும் போது உற்பத்தி செலவினத்துடன் 20 சதவீதம் ஊக்கத்தொகை மற்றும் உற்பத்தி மானியமாக தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்திலும், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் கிலோவுக்கு 25 ரூபாய் மானியம் வழங்கப்படுவதையும் விவசாயிகளிடம் கலந்து பேசினார்.

"குறைந்த வயதில் கூடுதல் லாபம் பெறத்தக்க வகையில் உள்ள பயறு வகை பயிர்களான உளுந்து, காராமணி, பாசிப்பயறு, துவரை, கொள்ளு ஆகிய பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்ய விவசாயிகள் முன் வர வேண்டும்' என, வேளாண் ஆணையர் கோசலராமன் கேட்டு கொண்டார். வயல் ஆய்வில் தொகுப்பு முறையில் அமைக்கப்பட்ட விதைப்பண்ணை பணிகளை பார்த்து பாராட்டினார். ஆய்வின் போது, வேளாண் செயலர் நநத்கிஷோர், வேளாண் இணை இயக்குனர் மனோகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**கரும்பு பயிரில் வேர் புழு தாக்குதல் இழப்பீடு வழங்க குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,03:21 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேர் புழு தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கிட வேண்டும்' என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரபாகர், வேளான் உதவி இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:

கண்ணு (மாவட்ட செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பை துணை தொழிலாக கொண்டுள்ளதால் வனப்பகுதிகளில் கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை பட்டி போட்டு மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்க வேண்டும்.

டி.ஆர்.ஓ., பிரபாகர்: வனப்பகுதிகளில் வெள்ளாடுகளை தவிர மற்ற கால்நடைகளை மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்கி வருகின்றனர். வனப்பகுதியில் பட்டி போட்டு கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை மேய விட அனுமதி வழங்க முடியாது.

சக்கரவர்த்தி: நெடுங்கல் அணைகட்டில் இருந்து பாரூர் ஏரிக்கு தண்ணீர் செல்லும் பிரதான கால்வாயில் 140க்கும் மேற்பட்ட இடங்களில் ஆயில் இன்ஜின் கொண்டு தண்ணீர் இறைக்கப்படுவதால், பாரூர் ஏரி பாசனம் மற்றும் திருவணப்பட்டி, புலியூர் ஏரி பாசன கடைமடை விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை பொதுப்பணித்துறையினர் தடுத்து நிறுத்த வேண்டும்.

டி.ஆர்.ஓ., பிரபாகர்: பொதுப்பணித்துறையினர் கால்வாய் நெடுகிலும் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு கால்வாயில் வைத்துள்ள ஆயில் இன்ஜின்களை பறிமுதல் செய்யப்படும். இதற்கு அந்தந்த பகுதி விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறிப்பாக காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 300 ஏக்கரில் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிரில் தற்போது அறுவடைக்கு தயாராக இருக்கும் நிலையில் வேர் புழுக்கள் தாக்குதல் அதிகஅளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் கரும்பு பயிர் கடுமையாக சேதமடைந்துள்ளது. சேதமடைந்த விவசாயிகளுக்கு பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வேர் புழு தாக்குதல் குறித்து வேளாண் துறை மூலம் சர்வே செய்யப்படும். மேலும் காலதாமதம் செய்யாமல் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக கரும்பு வெட்ட

ஆர்டர் வழங்கப்படும். நோய் தாக்குதலால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

ராமகவுண்டர்: தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கும்மனூர்- ஒம்பலக்கட்டு இடையே பாலம் இல்லாததால் விவசாயிகள் 15 கி.மீ., சுற்றி வந்து விவசாயம் செய்யும் நிலை உள்ளது. உடனடியாக அந்த பகுதியில் தரைப்பாலம் கட்ட வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி மூலம் அந்த பகுதியல் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**துல்லிய பண்ணை திட்டத்தில் மஞ்சள் சாகுபடி பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:50 IST

ஈரோடு: பவானி வட்டாரத்தில் துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ், மஞ்சள் சாகுபடி பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசின் மானிய நிதி உதவியுடன் விவசாயிகள் சொட்டு நீர்ப் பாசனத்தில் அதிகளவு பயன் பெறுகின்றனர்.

பவானி வட்டாரம் எலவமலை, காலிங்கராயன் பாளையம், ஆப்பக்கூடல், பவானி, சின்னபுலியூர் உள்பட பல இடங்களில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன், துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் அதிகளவு பயன்களை பெற்று விவசாயிகள் நவீன முறையில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.பவானி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் முனியாண்டி கூறியதாவது: பவானி வட்டாரத்தில் நடப்பாண்டு மத்திய, மாநில அரசின் மானிய நிதியுதவியுடன், துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ், சின்னப்புலியூரை சேர்ந்த 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 16 பேர் பொது விவசாயிகள், நான்கு பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் சொட்டு நீர் கருவி அமைக்க 48 ஆயிரம் ரூபாய், உரம் வாங்க 15 ஆயிரம் ரூபாய், விதைக்கு 5,000 ரூபாய் மானியம், இரண்டு நாள் விவசாயப் பயிற்சிக்கு 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்காக 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் மஞ்சள், வாழை, மரவள்ளி மற்றும் காய்கறி பயிர்களை பயிரிடலாம். தண்ணீரை மிச்சப்படுத்தவும், உரங்களை தண்ணீருடன் குழாய் வழியாக வயலில் பாய்ச்சவும், விவசாயிகளுக்கு வேலைப்பளு குறைக்கவும் துல்லிய பண்ணைத் திட்டம் உதவுகிறது. இதற்காக மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகிறது. கிணற்றில் இருந்து எடுக்கப்படும் தண்ணீர் சுத்தப்படுத்தப்பட்டு, உரம் கலக்கப்பட்டு, குழாய் வழியாக நேரடியாக மஞ்சள்

தோட்டத்துக்கு தண்ணீர் செல்கிறது. ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் முழுவதும் தண்ணீர் வழங்கும் வகையில் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் அனைத்து இடங்களிலும் துல்லிய பண்ணைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**தொடர் மழையால் தே.பருப்பு வரத்து சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:43 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் தொடர்ந்து பெய்து வரும் தொடர் மழையால் தேங்காய் பருப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வங்கக் கடலில் எழுந்துள்ள குறைந்தழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் ஒரு வாரமாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. கோபி வட்டாரத்தில் 23 ம்தேதி வரை 72 மி.மீ. மழை பெய்துள்ளது. தொடர்மழையால் நிலக்கடலை பயிர்களில் பூ பிடித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தனர். தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை கிடைத்து வரும் நிலையில், மழை காரணமாக தேங்காயை உடைத்து காயவைக்க முடியாமல், கோபி வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் திணறி வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கடந்த வாரம் 857 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. தொடர்மழை காரணமாக நடப்பு வாரம் 460 மூட்டைகளே வந்தது. அதிகபட்சமாக கிலோ 39.27 ரூபாய், குறைந்தபட்சமாக 37.37 ரூபாய், சராசரியாக 38.75 ரூபாய்க்கு விற்றது. உற்பத்தி குறைவால் கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்புக்கு கிலோவுக்கு 69 பைசா வரை விலை அதிகரித்திருந்தது.

**வாழைக்கு காப்பீடு: உதவுமா அரசு?விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,00:49 IST

அன்னூர்: வாழைத்தோட்டங்களுக்கு இன்சூரன்ஸ் செய்ய இன்சூரன்ஸ் நிறுவனம் மறுப்பதாக விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். அன்னூர் வட்டாரத்தில் தெலுங்குபாளையம், பிள்ளையப்பம்பாளையம், குப்பேபாளையம், செங்காளிபாளையம், பொன்னே கவுண்டன்புதூர், கணுவக்கரை, கரியாக்கவுண்டனூர் உள்ளிட்ட 80 ஊர்களில் நேந்திரன் மற்றும் கதளி ரக வாழை பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படுகிறது. வாழை வெட்டும் சீசன் செப்டம்பரில் துவங்கி மார்ச் வரை நீடிக்கிறது. அறுவடை செய்யப்படும் 90 சதவீத வாழைத்தார் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. பத்து சதவீதம் மட்டும் உள்ளூருக்கும், மும்பைக்கும் அனுப்பப்படுகிறது. கிணற்றுநீர் அதிகமாக உள்ள விவசாயிகளுக்கு வாழை முக்கியப்பயிராக உள்ளது. தற்போது நேந்திரனுக்கு கிலோ 30 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. வியாபாரிகள் விவசாயிகளிடம் விலைபேசி தோட்டத்துக்கே வந்து வெட்டி எடுத்துச்செல்கின்றனர். ஆனால், ஒவ்வொரு ஆண்டும்

சூறாவளி காற்றில் இருந்து தப்பி வாழைத்தார்களை முழுமையாக வெட்டி விற்க முடியுமா, என்ற அச்சத்திலேயே உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து, தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் பொன்னுச்சாமி கூறியதாவது: தொழிலாளர் பற்றாக்குறை, பூச்சி தாக்குதல், மழை குறைவு, உரம் விலை அதிகரிப்பு ஆகியவற்றை சமாளித்து வாழை பயிரிடுகிறோம். ஆனால், நேந்திரன் வாழைத்தார் பிஞ்சாக இருக்கும் ஆனி, ஆடி மாதங்களில் வீசும் சூறாவாளி காற்றால் அன்னூர் வட்டாரத்தில் ஆண்டுக்கு ஒரு லட்சம் வாழைமரங்கள் முறிந்து விழுகின்றன. முறிந்து விழுந்த வாழை மரங்களில் தார்கள் பிஞ்சாக இருப்பதால் வியாபாரிகள் வாங்குவதில்லை. அவற்றை அப்புறப்படுத்தவே ஏக்கருக்கு 5,000 ரூபாய் செலவாகிறது. சூறைக்காற்றில் இருந்து தப்பிக்க பிளாஸ்டிக் நாடாக்களால் வாழைமரங்களை இழுத்து கட்டினாலும் தாக்குப்பிடிப்பதில்லை. இதற்காக இன்சூரன்ஸ் செய்யச் சென்றால் "வாழைமரங்கள் சூறாவளி காற்றால் பாதிக்கப்பட்டால் அதற்கு முழு தொகையும் கிடைக்கும் வகையில் இன்சூரன்ஸ் செய்ய முடியாது' என பொதுத்துறை இன்சூரன்ஸ் நிறுவனம் தெரிவிக்கிறது. வேளாண் துறையில் வானிலை சார்ந்த இன்சூரன்ஸ் மட்டும் செய்யப்படுகிறது. இதனால் வாழை விவசாயிகள் அச்சத்துடன் உள்ளனர். அரசு, வாழைதோட்டங்களுக்கு நியாயமான கட்டணத்தில் இன்சூரன்ஸ் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆண்டுக்கு ஆண்டு வாழை பயிரிடுவோர் எண்ணிக்கை குறையும். விவசாய நிலப்பரப்பு குறையும். அதன்பின் தோட்டங்கள் "லே-அவுட்' களாக விரைவில் மாறி விடும். இவ்வாறு, பொன்னுச்சாமி தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.90 லட்சம் நிதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,03:30 IST

பொள்ளாச்சி: ""ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விழிப்புணர்வு ஏற்படுத்த, கோவை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டுக்கு 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,'' என்று வேளாண்மை இணை இயக்குனர் நடராஜன் கூறினார். பொள்ளாச்சியில் வேளாண் துறை மற்றும் வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் மாவுப்பூச்சி பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பொள்ளாச்சி தெற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் பயிற்சியின் நோக்கம் குறித்தும், ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ராஜமாணிக்கம் மாவுப்பூச்சி தாக்குதல் பற்றியும், தடுப்பு நடவடிக்கை பற்றியும் பேசினர். கோவை வேளாண்மை இணை இயக்குனர் நடராஜன் பேசியதாவது: கோவை மாவட்டத்தில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. பருத்தி, கொய்யா, மரவள்ளி, மல்பெரி, பப்பாளி உள்ளிட்ட பயிர்களை மாவுப்பூச்சிகள் அதிகம்

தாக்கியுள்ளது. வேளாண் துறை சார்பில் கிராம அளவில் பயிற்சி முகாம்கள் நடத்தி மாவுப்பூச்சி தாக்கம் பற்றி தெரிவிக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தி மாவுப்பூச்சி தாக்குதல் தடுக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் 12 வட்டாரத்திலும், திருப்பூர் மாவட்டத்தில் 7 வட்டாரத்திலும் சேர்த்து 19 வட்டாரங்களில் மாவுப்பூச்சி தாக்குதல் கண்டறியப்பட்டது. அதில், அன்னூர் வட்டாரத்தில் இரண்டு கிராமத்திலும், அவிநாசி வட்டாரத்தில் இரண்டு கிராமத்திலும் 6,100 ஏக்கரில் மாவுப்பூச்சி தாக்கம் அதிகமாக இருந்தது. மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதையும் அன்னூர், அவிநாசி வட்டாரத்தில் மொத்தம் நான்கு கிராமங்களுக்கு செலவிடப்பட்டது. விவசாய பகுதியிலும், விவசாயம் அல்லாத ரோட்டோர பகுதியிலும் மொத்தம் ஒரு கோடி ரூபாய் நிதியில், உயிரியல் கட்டுப்பாடு முறைகளும், ரசாயன கட்டுப்பாடு முறைகளும் கையாளப்பட்டு மாவுப்பூச்சிகள் அழிக்கப்பட்டுள்ளது. ரசாயன கட்டுப்பாடு முறையால், நன்மை செய்யும் இரைவிழுங்கும் பூச்சிகளும் பாதிக்கப்படுகின்றன. அதனால், விஞ்ஞானிகள் ஆய்வு செய்து மாவுப்பூச்சிகளை உணவாக உண்ணும் இரைவிழுங்கி பூச்சிகளை அதிகமாக உற்பத்தி செய்துள்ளனர். ரசாயன முறையை கையாளாமல், உயிரியல் முறையை கடைபிடிக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டுக்கு ஆத்மா திட்டத்திற்கு 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை கொண்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி, செயல்விளக்க திடல், தொழில்நுட்ப சுற்றுலா, விவசாயிகள்- விஞ்ஞானிகள் ஆலோசனை கூட்டம், விவசாய பொருட்காட்சி போன்றவை நடத்தப்படுகிறது. கோவை மாவட்டத்தில் ஏழு துறைகளை உள்ளடக்கி ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாய பொருட்காட்சி வரும் டிசம்பர் மாதம் மூன்று நாட்களுக்கு பொள்ளாச்சியில் நடக்கவுள்ளது. இவ்வாறு, இணை இயக்குனர் பேசினார். பொள்ளாச்சி வடக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ், ஆத்மா திட்ட வட்டாரக்குழு தலைவர்கள் கிருஷ்ணகுமார், சிவன்மலைசாமி, முத்துசாமி, பொள்ளாச்சி தெற்கு, வடக்கு மற்றும் ஆனைமலை பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் நிர்மலா, அசோகன், துணை வோளண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**மாவுப்பூச்சியால் விவசாய பயிர்கள் அழிந்து விடும்; பேராசிரியர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,01:03 IST

பொள்ளாச்சி: தட்பவெட்ப நிலை மாறியுள்ளதால் மாவுப்பூச்சியின் பெருக்கமும், தாக்கமும் குறைந்துள்ளது. ஆனாலும், மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தாவிட்டால், விவசாய பயிர்கள்

முழுமையாக அழிந்து விடும் நிலை உருவாகியுள்ளது. ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவரும், பூச்சியியல் துறை பேராசிரியருமான ராஜமாணிக்கம் கூறியதாவது:
மாவுப்பூச்சியானது உடல் முழுவதும் மாவு மற்றும் மெழுகு பூச்சுடன் கூடிய சுமார் 2.2 மி.மீ., நீளம் மற்றும் 1.5 மி.மீ., பருமன் கொண்டது. பெரும்பாலான மாவுப்பூச்சிகள் இளஞ்சிவப்பு நிறத்திலும், சிலவகை மாவுப்பூச்சிகள் கரு ஊதா மற்றும் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். உடலின் பின்பகுதியிலும் பக்கவாட்டிலும் மெழுகு போன்ற 17 இணை நீட்சி இழைகள் காணப்படும். முட்டை, குஞ்சு மற்றும் முதிர்ந்த பூச்சி என்று 3 பருவங்களை கொண்டுள்ளது. முட்டை பருவம் சாதாரணமாக 7- 14 நாட்களில் முடிந்து, குஞ்சுகள் வெளிவரும். குஞ்சு பருவம் 20- 30 நாட்களில் முடிந்து விடும். மாவுப்பூச்சிகள் ஆண்டுக்கு 10- 15 தலைமுறைகள் வரை இனவிருத்தி செய்யக்கூடியவை. ஆண்பூச்சி ஈ போன்று ஒரு ஜோடி இறக்கையுடன் காணப்படும். இவை சேதம் ஏதும் செய்யாமல் இனப்பெருக்கம் முடிந்தவுடன் 2- 3 நாட்களில் இறந்து விடும். பெண் பூச்சிகள் ஒரு முறையில் 200 - 300 முட்டைகள் இடும். முட்டைகள் வெண்ணிற பஞ்சு போன்ற பொருளால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு பெண் பூச்சியும் வாழ்நாளில் 400 முதல் 500 முட்டைகளை இடும். தாய்ப்பூச்சியானது இனத்தை பொறுத்து 60 நாட்கள் வரையிலும் வாழும். மாவுப்பூச்சியை வெள்ளைதாளால் நசுக்கும் போது மஞ்சள் நிறமடையும். ஆல்கஹாலில் போடப் பட்ட 30 நிமிடத்தில் கருமை நிறத்திற்கு மாறி விடும். மாவுப்பூச்சி தாக்கிய பயிர்கள் மஞ்சள் நிறமான, காய்ந்த, வளைந்து நெளிந்த மற்றும் வளர்ச்சி குன்றிய குருத்துகள் காணப்படும். சிவப்பு மற்றும் கருப்பு எறும்புகள் நடமாட்டம் அதிகம் இருக்கும். பளபளப்பான ஒட்டும் தன்மையுள்ள தேன் போன்ற திரவம், இலை மற்றும் இதர பாகங்களில் காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி விடும். நுனி இலைகள் பூச்சிகளின் உமிழ்நீரால் வலைபோல் பின்னப்படும். பயிர் வளர்ச்சி குன்றி இலை மற்றும் பழங்கள் உதிரும். இலைகள் இன்றி பயிர்கள் வாடி கருகி விடும். மாவுப் பூச்சிகள் களைகள், எறும்பு, மனித நடமாட்டம், காற்று மூலம் பரவுகிறது. களைகளை அகற்றி வயல்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தாக்குதலுக்குள்ளான செடியை அகற்றி அழிக்க வேண்டும். தாக்குதல் குறைவாக இருக்கும் போதே தேவையான கட்டுப் பாட்டு முறைகளை கையாள வேண்டும். ஒட்டுண்ணி, இரைவிழுங்கிகள் இருக்கும் போது பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். சேதம் குறைவாகவும், ஒட்டுண்ணி, இரைவிழுங்கிகள் இல்லாத போது பரிந்துரை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருத்துகளை பயன்படுத்தலாம். மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப் படுத்தாவிட்டால், விவசாய பயிர்கள் முழுமையாக அழிந்து விடும் நிலை உருவாகியுள்ளது. தற்போது தட்பவெட்ப நிலை மாறியுள்ளதால் மாவுப்பூச்சியின் பெருக்கமும், தாக்கமும் குறைந்துள்ளது. இவ்வாறு, ராஜமாணிக்கம் கூறினார்.

பருத்திக்கு தட்டுப்பாடு; நூல் விலை மீண்டும் உயர்ந்தது

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,01:56 IST

திருப்பூர்: பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நூற்பாலைகளில் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. "இதனால், நூல் விலை நிர்ணய ஒப்பந்தத்துக்கு மாறாக, கிலோவுக்கு 10 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளதாக' ஏற்றுமதியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். கடந்த பருத்தி (அக்.,- செப்.,) ஆண்டில், மொத்த பருத்தி உற்பத்தியில் 11 சதவீதம் இந்தியாவில் விளைந்தது. விவசாயிகள் நலனை முன் வைத்து, அளவுக்கு அதிகமான ஏற்றுமதிக்கு மத்திய அரசு வழிகாட்டியது. இதனால், விவசாயிகள் பயனடைந்தனரா என்பதை உறுதி செய்ய முடியாவிட்டாலும், பருத்தி வியாபாரிகளும், நிறுவனங்களும் நல்ல லாபம் சம்பாதித்தனர். கடந்தாண்டு நிலவரப்படி, இந்தியாவில் 295 லட்சம் பேல் பருத்தி விளைந்தது. பழைய இருப்பு 71.50 லட்சம் பேல் இருந்தது; ஏழு லட்சம் பேல் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மொத்தமாக, 373.50 லட்சம் பேல் பருத்தி இந்தியாவில் இருந்தன.

உள்நாட்டு தேவைக்கு 250 லட்சம் பேல் பருத்தி செலவிடப்பட்டது. மீதியிருந்த 120 லட்சம் பேல் பருத்தியில், 83 லட்சம் பேல் ஏற்றுமதி செய்யப்பட்டது. கையிருப்பாக 50 லட்சம் பேல் இருக்குமென மத்திய அரசு கூறியிருந்தாலும், தற்போது 40 லட்சம் பேல் மட்டுமே இந்தியாவில் உள்ளது. அதிலும், 60 சதவீத பஞ்சு, பெரிய நூற்பாலைகளில் பத்திரமாக உள்ளது. கடந்தாண்டு நடந்த கட்டுப்பாடற்ற செயல்பாடுகளால், சிறு மற்றும் நடுத்தர நூற்பாலைகள் பாதிக்கப்பட்டன. பாதிப்புகளை சமாளிக்கும் வகையில், நூல் விலையை இஷ்டம் போல் உயர்த்திக் கொண்டன. கடந்த சில மாதங்களில் 45 சதவீதம் அளவுக்கு நூல் விலை உயர்ந்தது. நூல் விலையை ஈடு செய்யும் அளவுக்கு பனியன் உற்பத்தி கட்டணத்தை உயர்த்த முடியாத நிலை ஏற்பட்டதால், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு பனியன் உற்பத்தி நிறுவனங்கள் ஸ்தம்பித்தன. பின்னலாடை மற்றும் விசைத்தறி தொழில் முற்றிலும் நின்றுபோகும் நிலை ஏற்பட்ட பின், பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. மத்திய அரசும் மவுனத்தை கலைத்து, பஞ்சு, நூல் விலையை குறைக்க நடவடிக்கை மேற்கொண்டது; அதுவும் பலனளிக்கவில்லை. கடந்த ஜூன் 24ல் நடந்த ஏற்றுமதியாளர் - நூற்பாலைகள் பேச்சில், மூன்று மாதங்களுக்கு நூல் விலை உறுதி செய்யப்பட்டது.

அதன்படி, கிலோ 194க்கு விற்ற ஒரு கிலோ 40ம் நம்பர் காட்டன் ஒசைரி நூல், 185 ரூபாயாக குறைந்தது. 184க்கு விற்ற 34ம் நம்பர் நூல் 178 ரூபாய்; 177க்கு விற்ற 30ம் நம்பர் நூல் 171 ரூபாய்; 165க்கு விற்ற 24ம் நம்பர் 159 ரூபாய்; 157க்கு விற்ற 20ம் நம்பர் 151 ரூபாயாக குறைந்தது. ஏற்றுமதி ஆர்டரை உறுதி செய்யும் வகையில், ஆக., 31 வரை, இதேவிலை

தொடருமென நூற்பாலைகள் உறுதியளித்தன. இதன் பின்பும் தயக்கம் காட்டி வந்த ஏற்றுமதியாளர்கள், குளிர்கால ஆயத்த ஆடை ஆர்டரை ஒப்பந்தம் செய்து, உற்பத்தியை துவக்கினர். இருப்பினும், "அக்., 15க்கு பிறகு பருத்தி வரத்து துவங்கிவிடும், ஏற்கனவே பாதிப்புகளை சந்தித்து இருப்பதால், மத்திய அரசு தேவையான பருத்தி கிடைக்க நடவடிக்கை எடுக்கும். நூல் விலை மேலும் குறையும்' என்று நம்பியிருந்தனர். ஆனால், சில நாட்களுக்கு முன், "அக்., 1ல் இருந்து பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி' என்று அரசு அறிவித்ததால், நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மீண்டும் ஏற்றுமதிக்கு சலுகையுடன் அனுமதி வழங்கியுள்ளதால், ஒரு கேண்டி பருத்தி 34 ஆயிரம் ரூபாய் என்ற விலையில் முன்பதிவு நடந்து வருகிறது. இதேநிலை தொடர்ந்தால், பருத்தி வரத்து துவங்கும் போது, ஒரு கேண்டி பஞ்சு 40 ஆயிரம் ரூபாயாக உயரவும் வாய்ப்புள்ளதாக நூற்பாலை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து ஏற்றுமதியாளர்கள் கூறுகையில்,""கடந்த 23ம் தேதி 10 ரூபாய் வரை நூல் விலை உயர்ந்துள்ளது. வரும் 1ம் தேதிக்கு பிறகு நூல் விலையை மேலும் உயர்த்தவும் நூற்பாலைகள் திட்டமிட்டுள்ளன. அதற்காக, நூல் வினியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கூடுதல் விலை கொடுத்தாலும் தேவையான நூல் தற்போது கிடைப்பதில்லை. ஜவுளி உற்பத்தியாளர்களின் பாதிப்புகளை நினைத்து பார்க்காமல், பருத்தி ஏற்றுமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது கண்டனத்திற்குரியது. வரும் 1ம் தேதிக்கு பிறகு மீண்டும் நூல் விலை உயர்ந்தால், மீண்டும் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கும்,' என்றனர்.ஓராண்டில் ரூ.100 உயர்வு: கடந்த 2009ம் ஆண்டு ஆக., மாதம் ஒரு கேண்டி பஞ்சு 22 ஆயிரத்து 600க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அது, 24 ஆயிரத்து 300 என்ற விலையில் தொழிற்சாலைகளுக்கு வந்து சேர்ந்தது. தற்போது, ஒரு கேண்டி பஞ்சு 34 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இதர செலவுகள் சேரும்போது, ஒரு கிலோ பஞ்சு 100 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

கிறிஸ்துமஸ் ஆர்டர் பாதிப்பு: குளிர்கால ஆர்டர் மீதான உற்பத்தி தற்போது நடந்து வருகிறது. கடந்த 23ம் தேதி நூல் விலை கிலோவுக்கு 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனால், குளிர்கால ஆர்டர்களில் நஷ்டம் ஏற்படும் என்று பனியன் உற்பத்தியாளர்கள் அஞ்சுகின்றனர். இதேபோல், டிச., மாதம் அனுப்ப வேண்டிய கிறிஸ்துமஸ் ஆர்டர்களும், கடந்த ஜூன் மாத நூல்விலை அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டன. வரும் 1ம் தேதிக்கு பிறகு, மீண்டும் நூல் விலை உயர வாய்ப்புள்ளதால், கிறிஸ்துமஸ் ஆர்டர்களை முடிக்கும்போதும் பெருத்த நஷ்டம் ஏற்படும் என உற்பத்தியாளர்கள் கதிகலங்கி நிற்கின்றனர்.

**ரூ.6 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,01:55 IST

அவிநாசி: அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்தில் அனைத்து ரக பருத்தியும் குவிண் டாலுக்கு ரூ.250 முதல் ரூ.550 வரை அதிகரித்தது. நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த, இந்த வார ஏலத்துக்கு 512 மூட்டை பருத்தி வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 200 மூட்டை குறைவு. வரத்து குறைந்த நிலையிலும், அனைத்து ரக பருத்தியும் கடந்த வாரத்தை விட, ரூ.250 முதல் ரூ.550 வரை ஏலம் போனது. குறிப்பாக, டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக ரூ.4,350 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது. இந்த வார ஏலத்தில் அனைத்து பருத்தி ரகங் களின் விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,700 முதல் ரூ.3,850 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,750 முதல் ரூ.4,150 வரை, எம்.சி.யு., 5 மற்றும் சுரபி ரூ.3,850 முதல் ரூ.4,350 வரை, டி.சி.எச்., ரூ.4,000 முதல் ரூ.4,350 வரை மற்றும் மட்ட ரகம் ரூ.1,850 முதல் ரூ.2,100 வரை.

அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலு வலர் பழனிசாமி கூறிய தாவது: இந்த வாரம் பருத்தி வரத்து சற்று குறைந்தாலும் கூட, அனைத்து ரகத் துக்கும் நல்ல விலை கிடைத்தது. கடந்த மூன்று மாதத்தில் இந்த வாரமே டி.சி.எச்., 4,350க்கு ஏலம் போனது குறிப்பிடத் தக்கது. பிற ரகங்களுக்கும் நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஈரோடு மாவட்டத்தின் பல பகுதிகள், தர்மபுரி, பென்னாகரம் ஆகிய பகுதி களிலிருந்து 55 விவசாயிகள் பயனடைந்தனர். ரூ.6.20 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. அடுத்த வாரமும் இதே விலை நிலவரம் நீடிக்கும் என்று எதிர் பார்க்கிறோம், என்றார்.

**மஞ்சள் சாகுபடி கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,01:50 IST

திருப்பூர்:திருப்பூர் தோட்டக்கலைத்துறை  அலுவலர்களுக்கு, மஞ்சள் சாகுபடி குறித்த கருத்தரங்கு, திருப்பூரில் நடந்தது. தோட்டக்கலைத்துறை மற்றும் "பைசஸ்போர்டு' சார்பில், மஞ்சள் பயிர் சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது. தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இக்னேஷியஸ் ரோச் தலைமை வகித்தார். திருப்பூர் கால்நடைத்துறை பல்கலை தலைவர் செல்வராஜ் முன்னிலை வகித்தார்.மஞ்சள் ஏற்றுமதி நிலவரம் குறித்து ஈரோடு "நானி அக்ரோ புரூட்ஸ்' இயக்குனர் மோகன்குமார் பேசினார். வேளாண் பல்கலை துணை பேராசிரியர் முத்துலட்சுமி, மஞ்சள் பயிரை தாக்கும் பூச்சி, நோய் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளை எடுத்துரைத்தார்.மஞ்சள்

ஏற்றுமதி தேவை, அதற்கான தரத்தை உருவாக்குதல்; "பைசஸ் போர்டு' வழங்கும் திட்டம்; மஞ்சளை நீராவியில் வேக வைக்கும் இயந்திரம் மற்றும் மெருகேற்றலுக்கான கருவியை மானிய விலையில் வழங்குதல்; தனிநபர்களுக்கு கருவி வழங்காமல், விவசாயிகள் குழு அல்லது சுயஉதவி குழுவினருக்கு மட்டும் அளிக்கப்படும் என்பதை, "பைசஸ் போர்டு' முதுநிலை கள அதிகாரி ராமலிங்கம் தெரிவித்தார்.

**தேயிலை விவசாயிகளுக்கு மானியம் அ.தி.மு.க., விவசாயப் பிரிவு "குரல்'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:21 IST

ஊட்டி: "தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்' என, அ.தி.மு.க., வலியுறுத்தியுள்ளது. அ.தி.மு.க., விவசாயப் பிரிவு மாவட்ட கலந்தாய்வு கூட்டம், ஊட்டி ஒய்.பி.ஏ., அரங்கில் நடத்தப்பட்டது.  மாவட்ட விவசாயப் பிரிவு செயலர் தேனாடு லட்சுமணன் வரவேற்றார். நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் சிறு, குறு தேயிலை விவசாயிகளுக்கு, அ.தி.மு.க., ஆட்சியில் மானியம் வழங்கப்பட்டது. தற்போது, தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்; விவசாயிகளை புறக்கணிக்கும் தி.மு.க., அரசைக் கண்டிப்பது; அ.தி.மு.க., ஆட்சியை மீண்டும் மலரச் செய்ய, கட்சியினர் உழைப்பது என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.  மாநில விவசாயப் பிரிவு செயலர் துரை கோவிந்தராஜ் தலைமை வகித்தார். பழனிசாமி, விவசாயப் பயிரிவு இணை செயலர் கமலநாதன் முன்னிலை வகித்தனர். தலைமை நிலைய செயலர் செங்கோட்டையன், மாவட்ட செயலர் செல்வராஜ், மாவட்ட எம்.ஜி.ஆர்., மன்ற செயலர் மில்லர், ஏ.டி.பி., மாநில செயலர் ஜெயராமன், ஊட்டி நகர செயலர் தேவராஜன் பங்கேற்றனர்.  ஊட்டி நகர ஒன்றிய செயலர் நாராயணன் நன்றி கூறினார்.

**மானிய விலையில்வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,23:12 IST

சிங்கம்புணரி:எஸ்.புதூர் ஒன்றிய விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகின்றன. பவர் டில்லருக்கு, 45 ஆயிரம் ரூபாய்; ரேவிட்டா வீட்டர் கருவிக்கு, 30 ஆயிரம் ரூபாய்; மின்சார பம்ப் செட், 10 ஆயிரம்; விதை விதைக் கும் கருவி, 2,500; கோனா வீட்டர், மார்கன் கருவிகள் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படும். விவசாயிகள் எஸ்.புதூர் வேளாண் வளர்ச்சி மையத்தை, அணுகுமாறு, உதவி இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்தார்.

**உரங்களில் உள்ள சத்துக்களின்அடிப்படையில் விலை நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,23:01 IST

சிவகாசி:உரங்களின் உள்ள சத்துக்களின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து நோட்டீஸ் அச்சடித்து வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.உரங்களின் உள்ள சத்துக்களின் அடிப்படையில் உரங்களின் விலை அரசால் நிர்ணயிக்கப்பட் டுள்ளது. 50 கிலோ எடை உர மூடை அதிக பட்ச சில்லரை விலை நிர்ணயித்துள்ளனர். பல்வேறு நிறுவனங்கள் தயாரித்துள்ள யூரியா மூடை ரூ.276.12காசு, மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களான பொட்டாஷ் ரூ.231.66 காசு முதல் 262.88 காசு. காம்ப்ளக்ஸ் ரூ.336.70காசு முதல் ரூ.358.54 காசு, கோரமண்டல், சுவாரி காம்ப் ளக்ஸ் உரம் ரூ.456.82காசு, ரூ.428.32காசு. டி.ஏ.பி., ரூ.516.85 முதல் ரூ.517.40 காசு என நிர்ணயம் செய் துள்ளனர். உரம் சம்மந்தமான புகார்களை வேளாண்மை இணை இயக்குனர் பாண்டியராஜிடம் 94438 54725 என்ற மொபைலில் தெரிவிக்கலாம் என வேளாண் இணை இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வீட்டில் காய்கறி தோட்டம் அமைக்க விழிப்புணர்வு தேவை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:20 IST

புதூர் : வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க இளைய தலைமுறைகளுக்கும் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுவினர்களுக்கும், வேளா ண்மை கல்வி மாணவ, மாணவியர்களுக்கும் விழி ப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம். இதற்கென வே ளாண் அதிகாரிகள் சிறப்பு முகாம் நடத்த வே ண்டும். புதூர் வட்டார தோட்டக்கலை விவசாய ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வேளாண் துறையில் செயற்கை முறை அதிகளவில் புகுந்து இயற்கை வேளாண்மையை குறை த்து விட்டது. அரசு மற்றும் தனியார் மூலம் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் அனைவருக்கும் அதற்கான விழிப்புணர்வு சென்றடைவதில்லை. இயற்கையோடு இணைந்த விவசாயத்தின் மகிமையை அனைவரும் உணர வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது சிறந்தது.

மறைந்து வரும் விவசாய தொழிலை பாதுகாக்கவும், உணவு பொருள் உற்பத்தியில் தற்சார்பு அடைய வீட்டு காய்கறி முறை உதவிகரமாக இருக்கும். மேலும் இளைய தலைமுறையிடம் விவசாயம் குறித்து விழிப்புணர்வு அதிகரிக்கவும் வழி ஏற்படும். குடியிருப்பை சுற்றியுள்ள காலி இடங்களில் காய்கறி தோட்டம் ஏற்படுத்தலாம். வெங்காயம், வெண்டை, தக்காளி, கத்தரி, முருங்கை, கொத்தவரை, வாழை, பப்பாளி, எலுமிச்சை, நெல்லி, மாதுளை கறிவேப்பிலை

போன்ற காய்கறி, பழங்களை பயிர் செய்ய முடியும். வீட்டின் சுற்றுப்புறம் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கும். வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரும், துர்நாற்றத்தை உருவாக்காமல் பயனுள்ளதாக மாற்றப்படும். குடும்பத்தில் உள்ள குழந்தை முதல் ஆண், பெண் இருபாலரும் தோ ட்ட வேலைகளை செய்ய முடிகிறது. அனைவரும் விவசாய முறைகளை தெரி ந்து கொள்ளுதல், உடற்பயிற்சி, வீட்டுக்கு தேவையான காய்கறி உடனடியாக பெறுதல் என பல நன்மை கிடைக்கிறது.

வீடுகளில் காய்கறி தோட்டம் ஏற்படுத்த மானிய விலையில், தோட்டக்கலை துறை விதை மற்றும் தேவையான தகவல் வழங்குகிறது. இந்தாண்டு மாவட்டம் முழுவதும் மானியத்தில் விதை பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு தோட்டங்களை ஊக்கப்படுத்தும் வகையில் மானிய அளவை அதிகரிக்க வேண்டும். தோட்டக்கலை துறை மற்றும் உள்ளாட்சி அமை ப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதில், மாவட்ட நிர்வாகம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் மற்றும் இளைய தலைமுறையினர் இடையே அதிக விழி ப்புணர்வு ஏற்படுத்துவது, நல்ல பலன் தரும். பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியிடங்களில் விழி ப்புணர்வு முகாம் உருவாக்க வேண்டும் என கோ ரிக்கை விடுத்துள்ளனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***வரத்து குறைவு எதிரொலி பூண்டு விலை கடும் உயர்வு; கிலோ ரூ.280–க்கு விற்பனை***

*கோவை, ஆக.27–*

*கோவை மார்க்கெட்டில் விற்பனையாகும் பூண்டு விலை வரத்து குறைவு காரணமாக ‘கிடுகிடு’ வென உயர்ந்தது. ஒரு கிலோ ரூ.280–க்கு விற்பனையானது.*

*ஒரு கிலோ பூண்டு ரூ.280–க்கு விற்பனை*

*சமையலுக்கு அன்றாடம் பயன்படும் பூண்டு விலை கடந்த சில மாதங்களாகவே அதிகரித்து வருகிறது. குறிப்பாக பிரியாணி, ரசம் போன்றவைகளுக்கு அதிக அளவில் பூண்டு பயன்படுத்தப்படுவது வழக்கம். கோவை மார்க்கெட்டுக்கு ஊட்டி, குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், இமாச்சலப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் விளையும் பூண்டு டன் கணக்கில் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தற்போதைய நிலையில் இமாச்சலப்பிரதேசத்தில் பூண்டின் விளைச்சல் குறைவாக உள்ள காரணத்தால் வரத்து குறைந்து அதன் விலை அதிகரித்து உள்ளது.*

நேற்றைய நிலையில் கோவை மார்க்கெட்டில் விற்பனையான பூண்டின் விலை விவரம் வருமாறு:–


இமாச்சலப்பிரதேச மாநில பூண்டு ஒரு கிலோ ரூ.250 முதல் ரூ.280 வரை விற்பனையானது. இதே ரகம் கடந்த சில நாட்களுக்கு முன்பு ரூ.180 முதல் ரூ.200 வரை விற்றது. ஒரு கிலோ நாட்டுப்பூண்டு ரூ.100 முதல் 120–க்கும், ஊட்டி மலைப்பூண்டு ரூ.200 முதல் ரூ.220–க்கும் விற்பனையானது. பூண்டு விலை ஏற்றம் குறித்து மார்க்கெட் சங்க நிர்வாகி ஒருவர் கூறியதாவது:–

பூண்டு ஏற்றுமதி அதிகம்

கோவை மார்க்கெட்டில் ஊட்டி மற்றும் இமாச்சலப்பிரதேச மாநிலத்தில் விளையும் பூண்டு அதிக அளவில் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது அங்கு விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக விலை அதிகரித்து உள்ளது. இதே போல் விதைக்காக பயன்படுத்தப்படும் ஊட்டி பூண்டை ராஜஸ்தான் மாநில வியாபாரிகள் அதிக அளவில் வாங்கி சென்றனர். மேலும் ஐக்கிய அரபு நாடுகள், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கு பூண்டு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பூண்டு விலை உயர்ந்து உள்ளது. இதே நிலை நீடிக்கும் பட்சத்தில் வருகிற தீபாவளிக்குள் ஒரு கிலோ பூண்டின் விலை ரூ.300 வரை உயர வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.05%–ஆக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஆகஸ்டு 14–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.05 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 10.35 சதவீதமாக இருந்தது. இது, சென்ற ஆண்டு இதே வாரத்தில் 13.45 சதவீதமாகவும், 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகவும் இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள்களுக்கான குறியீட்டு எண் 12.57 சதவீதமாக உயர்ந்திருந்தது.

ஆகஸ்டு 14–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உருளைக்கிழங்கின் விலை, சென்ற ஆண்டு இதே வாரத்துடன் ஒப்பிடும்போது 50 சதவீதம் குறைந்திருந்தது. வெங்காயத்தின் விலை 7.29 சதவீதம் சரிவடைந்திருந்தது. ஒட்டுமொத்த அளவில் காய்கறிகளின் விலை 14.23 சதவீதம் குறைந்திருந்தது.

அதேசமயம், பால் பொருள்கள் விலை 18.22 சதவீதம் உயர்ந்திருந்தது. பழங்கள் (15.24%), குறிப்பிட்ட தானியங்கள் (7.10%)விலையும் உயர்ந்திருந்தது.

பருப்பு வகைகள் (16%), அரிசி (7.72%), கோதுமை (7.61%) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஜூலை மாதத்தில் 9.97 சதவீதமாக இருந்தது.

**நடப்பு ஆண்டு ஏப்ரல் – ஜூலை மாத காலத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 12% உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 12 சதவீதம் அதிகரித்து 1.73 லட்சம் டன்னிலிருந்து 1.94 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

ஏலக்காய்

இந்தியாவின் நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளது. குறிப்பாக, ஏலக்காய் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. இதை வெளிப்படுத்துகின்ற வகையில், மதிப்பின் அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 17 சதவீதம் (ரூ.1,775.38

கோடி) வளர்ச்சி அடைந்து ரூ.2,084.96 கோடியாக அதிகரித்துள்ளது. டாலர் மதிப்பு அடிப்படையில் 21 சதவீதம் உயர்ந்து 37.47 கோடி டாலரிலிருந்து 45.41 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், நறுமண பொருள்களில் மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு ஆகியவற்றின் ஏற்றுமதியில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மிளகாய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 24 சதவீதம் உயர்ந்து 77,750 டன்னாக அதிகரித்துள்ளது. மதிப்பின் அடிப்படையில் இது 27 சதவீதம் உயர்ந்து ரூ.481.41 கோடியாக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் மிளகாயின் பங்களிப்பு 40 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மிளகு

மிளகு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 2 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், மதிப்பின் அடிப்படையில் 8 சதவீதம் உயர்ந்துள்ளது. பூண்டு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 1,184 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 1,957 சதவீதமும் உயர்ந்துள்ளது. கறி மசாலா, நறுமண எண்ணெய்கள் மற்றும் ஓலியோரெசின் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதியிலும் சிறப்பான அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் ரூ.5,100 கோடி மதிப்பிற்கு (112.50 கோடி டாலர்) 4.65 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி இந்த இலக்கில் முறையே அளவின் அடிப்படையில் 42 சதவீதம், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 41 சதவீதம், டாலர் மதிப்பு அடிப்படையில் 40 சதவீதமாக உள்ளது இதே வளர்ச்சி வேகம் நீடித்தால், நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி அனைத்து அம்சங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தாண்டிவிடும்.

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் ரூ.5,560.50 கோடி மதிப்பிற்கு (117.38 கோடி டாலர்) 5.03 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளன. இது, அந்த நிதி ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் அளவின் அடிப்படையில் 16 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 24 சதவீதமும் உயர்ந்துள்ளது.

**நீலகிரி மாவட்டத்தில், மாற்று திறனாளிகளுக்கு ரூ.20 லட்சம் செலவில் காபி மையங்கள் கூடலூரில் அமைச்சர் ராமச்சந்திரன் திறந்து வைத்தார்**

கூடலூர்,ஆக.27–

நீலகிரி மாவட்டத்தில் மாற்று திறனாளிகளுக்கு ரூ.20 லட்சம் செலவில் 10 காபி மையங்கள் அமைக் கப்பட்டுள்ளன. கூடலூரில் அமைக்கப் பட்டுள்ள காபி மையத்தை கதர்வாரிய துறை அமைச்சர் ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

மாற்று திறனாளிகளுக்கு காபி மையங்கள்

*மாவட்ட மாற்று திறனாளி கள் நல அலுவலகத்தின் உதவியுடன் ஊட்டி புளூ மவுண்ட்ஸ் நிர்வாகம், இந்துஸ்தான் லீவர் கம்பெனியுடன் இணைந்து நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி, கூடலூர் பஸ் நிலையங்கள் உள்பட பல்வேறு இடங்களில் 10 காபி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

*இதற்காக ரூ.20 லட்சம் செலவில் 10 காபி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கூடலூர் புதிய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள காபி மையத்தை தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த மையத்தில் மாற்று திறனாளி கள் மட்டுமே பணியாற்ற அனுமதிக்கப்படுவர். வாழ்க்கையில் உழைத்து முன்னேற விரும்பும் மாற்று திறனாளிகளை கண்டறிந்து இந்துஸ்தான் லீவர் கம்பெனி, புளூமவுண்ட்ஸ் நிர்வாகம் ஆகியவை இணைந்து உதவி வருகின்றன.*

*இது குறித்து தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கூறும் போது, ஒவ்வொரு மையமும் ரூ. 2 லட்சம் செலவில் அமைக் கப்பட்டுள்ளது. இதில் 2 மாற்று திறனாளிகள் பணியாற்றுவார்கள்.*

எந்திரம்

*காபி தயாரிப்பதற்கான அனைத்து மூலபொருட் களையும் குறிப்பிட்ட கம்பெனிகள் செய்து கொடுத்து விடும். மையத்தில் உள்ள எந்திரத்தில் குறிப்பிட்ட அளவு பொருட்களை சேர்த்தால் சூடான காபி தயாரித்து விடும். மாற்று திறனாளிகள் எளிதாக பயன்படுத்தும் வகையில் காபி தயாரிக்கும் எந்திரம் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.*

*இது குறித்து இந்துஸ்தான் லீவர் கம்பெனியின் தமிழக– கேரள அமைப்பாளர் அஜித்குமார் கூறும் போது மாற்று திறனாளிகள் நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.500 வரை சம்பாதிப்பதற்காக பொதுமக்கள் கூடும் இடங் களில் காபி மற்றும் தேநீர் மையங்களை அமைத்து வருகிறோம். நீலகிரி மாவட்டத்தில் 10 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் சுமார் 500 மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறினார்.*

*இந்த நிகழ்ச்சியில் இந்துஸ்தான் லீவர் கம்பெனி திட்ட அலுவலர் ஆன்டனி, உதவி மேலாளர் மணி, கேரள மாநில மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்பட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.*